விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 30 புதன்கிழமை (14.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 85

ராம் கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

வடக்கு-கிழக்கில் வன்முறை அதிகரிப்பு மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்

கண்காணிப்புக்குழு கவலை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வன்முறைகள், எறிகணை வீச்சுக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக அங்கு மோசமான சூழ்நிலை நிலவுகின்றது. இந்நிலைமை நீடித்தால் அபாயகரமான நிலை ஏற்படும் என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு பிரதேசத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கண்காணிப்புக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி யொருவர் மேலும் கூறியதாவது;

இப் பகுதிகளில் ஒரு பதற்றமான நிலை காணப்படுகின்றது. மக்கள் அச்சத்தின் மத்தியிலேயே வாழ்கின்றனர். வன்முறைகள் மற்றும் எறிகணை வீச்சுக்களால் பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இதனால் பொது மக்கள் காயமடைவதோடு சில சந்தர்ப்பங்களில் உயிரிழப்புக்களும் ஏற் (04 ஆம் பக்கம் பார்க்க)

கொஹிவலையில் 13 பேர் கைது

(கொழும்பு)

கொஹிவலையில் நேற்று முன்தினமிரவு பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் சந்தேகத்தின் பேரில் மூன்று பெண்கள் உட்பட 13பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக கல்கிசைப் பொலிஸ் அத்தியட்சகர் விலி அபேநாயக்க தெரிவித்தார்.

இத் தேடுதலின்போது கைதுசெய்யப்பட்டவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்தவர்களாவர். இவர்கள் தற்காலிகமாக கொஹிவலை (04 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்காவுடனான ஒப்பந்தம்

இலங்கைக்கு பாதகமாக அமையும்

ஐக்கிய தேசியக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் அண்மையில் செய்து கொண்ட பாதுகாப்புத் தொடர்பான உடன்படிக்கை நாட்டுக்கு மிகவும் பாதகமாக அமையக்கூடியது என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இவ் உடன்படிக்கை குறித்த ஆச்சரியமூட்டக்கூடிய தகவல்களை எதிர் வரும் பாராளுமன்ற கூட்டத்தொடரின் போது வெளிப்படுத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம் பெயர்ந்து செல்லும் மக்களை படத்தில் காணலாம்.

புதிய விமான சேவை தொடர்பாக இலங்கை-சீனா பீஜிங்கில் பேச்சு

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் மற்றொரு விமானசேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பற்றி ஆராய இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் சீனாவில் பீஜிங் நகரில் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

துறைமுக விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கொல்லுரே தலைமையிலான குழுவினர் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றனர்.

வெளிநாட்டு அமைச்சு, சிவில் விமான சேவை அதிகார சபை,சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் இக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் பயனாகவே இப் பேச்சுவார்த்தை இடம் பெறுவதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

இராணுவம்-புலிகள் மோதல் மக்களின் நிலை கேள்விக்குறி

ஐக்கிய நாடுகள் சபை கவலை

(நியூயோர்க்)

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையிலான போர் தீவிரமடைந்துள் ளதையடுத்து மட்டக்களப்புப் பகுதியில் இருந்து ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

எனவே சர்வதேச மனித நேய சட்டத்தை கடைப்பிடிக்கும்படி இரு தரப்பினரையும் ஐக்கியநாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது. உள் நாட்டில் இது போல ஏராளமான மக்கள் இடம் பெயர்வதில் மேலும் பிரச்சினையை உருவாக்கும்.

மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் எறி கணைகளை வீசி இரு தரப்பினரும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். இதனால் மக்களின் பாதுகாப்பு (04 ஆம் பக்கம் பார்க்க)

ஊரடங்கு நேரமாற்றம்

ஊரடங்குச் சட்டம் இரண்டு மணித்தியாலங்களால் தளர்த்தப்பட்டுள்ளதாக பலாலிப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இன்றிலிருந்து இரவு 8 மணி முதல் அதிகாலை 4 மணிவரையும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் நேற்று வரை இரவு 7 மணிமுதல் அதிகாலை 5மணிவரை அமுல்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-3,5)

மனித உரிமை மீறல்களை ஆராய யப்பான் பிரதிநிதி இலங்கை வருகை

மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய்வதற்காக யப்பானின் வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் சிபிறோஅற்சுமி இலங்கை வந்துள்ளார். இவர் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம உட்பட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இன்று மாலை வரை இலங்கையில் தங்கி நிற்கும் அவர் பொருளாதாரம் தொடர்பான கலந்துரையாடல்களிலும் ஈடுபடுவார் எனவும் அவரின் வருகை கொழும்பு அரசியல் (04 ஆம் பக்கம் பார்க்க)

கைதிகளின் உண்ணாவிரதம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

வெலிக்கடை புதிய மகசீன் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்க் கைதிகள் தற்காலிகமாக போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறைச்சாலைக்கு விஜயம் செய்து கைதிகள் சந்தித்து, நீதி அமைச்சருடன் கலந்துரையாடி அவர்களுக்குரிய பதிலை தருவதாக உறுதி அளித்தனர்.

இதனையடுத்து இவ் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. இவ் உண்ணா (04 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் கண்காணிப்பு குழுவினர் ஜேர்மன் தூதுவரைச் சந்திப்பு

(கொழும்பு)

காணாமல் போதல் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்களை அவதானிக்கும் நோக்கில் அரசியல் கட்சிகளினால் அமைக்கப்பட்ட மக்கள் கண்காணிப்புக்குழுவினர் நேற்று ஜேர்மனியத் தூதுவரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

கொழும்பிலுள்ள ஜேர்மனியத் தூதரகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் மக்கள் கண்காணிப்புக்குழுவின் சார்பில் அதன் ஏற்பாட்டாளர் மனோகணேசன், லக்ஷ்மன் கிரியெல்ல, சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், குழுவின் தலைவர் சிறிதுங்க (04 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.நா.சபை அதிகாரிகளுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தாம் செயற்திறன் மிக்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் சித்திரவதைகளுக்கான சிறப்பு பிரதிநிதியும் இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைக்கான செயலாளர் நாயகத்தின் பிரதிநிதியும் இலங்கை வந்து நிலைமைகளை பார்வையிட வேண்டுமென அரசாங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

இலங்கை-இந்திய அணிகளுக்கு ஹபீபுல் பஷார் எச்சரிக்கை

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் எதுவும் நடக்கலாம் என இலங்கை-இந்திய அணிகளுக்கு பங்களாதேஷ் அணித் தலைவர் ஹபீபுல் பஷார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகக் கிண்ணப் பயிற்சிப் போட்டியில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி அதிர்ச்சியளித்த பங்களாதேஷ் அணி முதற்சுற்றில் பி பிரிவில் இடம்பிடித்துள்ளது. இதில் பங்களாதேஷுடன் இலங்கை, இந்தியா, பெர்முடா அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

உலகக் கிண்ண முதற்சுற்றில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகளில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெறும் என்ற நிலையில் இலங்கை அல்லது இந்திய அணியை வீழ்த்த பங்களாதேஷ் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

இது குறித்து பங்களாதேஷ் அணித் தலைவர் ஹபீபுல் பஷார் கூறியதாவது, எங்கள் பிரிவில் உள்ள இந்தியா - இலங்கை அணிகள் வலுவானதாகவுள்ளன. அவர்கள் தற்போது நல்ல நிலையில் ஆடி வருகின்றார்கள்.

அந்த அணிகளை வீழ்த்துவது என்பது கடினமானது என்பதை அறிவோம். ஆனால் விளையாடி வருகின்றோம். எங்களது பலம் மற்றும் பலவீனத்தை அறிந்து கொள்ளும் விதத்தில் தொடர்ந்து நாங்கள் விளையாடி வருகின்றோம்.

குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் எங்களிடம் எந்தப் பலவீனமும் இல்லை. எனவே நாங்கள் நம்பிக்கையுடன் உள்ளோம். எங்கள் அணியில் நல்ல சுழல் பந்து வீச்சாளர்கள் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகள் ஆடுகளங்கள் ஒரு நாள் போட்டியை பொறுத்தமட்டில் அந்த குறிப்பிட்ட நாளில் யார் நன்றாக ஆடுகின்றார்கள் என்பதைப் பொறுத்தே முடிவு அமையும்.

அதில் எதுவும் நடக்கலாம். அதனால் நாங்கள் மோதிப் பார்த்து விடலாம் என்ற முடிபெடுத்திருக்கின்றோம். என்ன நடக்கின்றது என்று பாருங்கள். நாங்கள் நன்றாக சுழல் பந்து வீச்சுக்கு உதவிகரமாக இருக்கும் என்று எல்லோரும் நினைக்கின்றார்கள். அது எங்களுக்குப் பலமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

சில அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரர்களும் உள்ளனர். அவர்கள் சிறப்பாக ஆட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர் என்றார். (ச-5)

நேற்று ஆரம்பமான உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சை ஆறு ஓட்டங்களுக்கு விலாசியடிக்கும் மே.தீவுகளின் சாமுவேல்ஸ்.

இன்று இரு ஆட்டங்கள்

(செயிண்ட்கிட்ஸ்)

உலக கோப்பைக் கிரிகெட் போட்டியில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளது. ஏ பிரிவில் நடைபெறும் ஆட்டத்தில் நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியா - ஸ்கொட்லாந்து அணிகள் மோதுகின்றன.

மூன்று முறை சம்பியனான அவுஸ்திரேலியா மிக எளிதில் ஸ்கொட்லாந்தைத் தோற்கடிக்கும். உலகக் கோப்பையில் இதற்கு முன்பு இரு அணிகளும் ஒரு ஆட்டத்தில் விளையாடியிருக்கின்றன.

இதில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றுள்ளது. ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் மட்டுமே ஸ்கொட்லாந்து வெற்றி பெற முடியும். இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகின்றது.

செயிண்ட் லூசியாவில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சி பிரிவில் கென்ஜா - கனடா அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் உலகக் கிண்ணத்திற்கு மோதுவது இது இரண்டாவது முறையாகும்.

கடந்த உலகக் கிண்ணத்தில் கனடாவை கென்ஜா வென்றிருந்தது. கனடாவுடன் ஒப்பிடுகையில் கென்ஜா பலம் வாய்ந்தது. இதனால் அந்த அணிக்கு வெற்றி வாய்ப்பிருக்கின்றது. (ச-5)

அனுசரணை:-

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

மாகாண தமிழ்மொழித் தினப் போட்டிகள் திருமலையில் அடுத்த வாரம் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களின் தமிழ் மொழித் தினப் போட்டி நிகழ்ச்சிகள் எதிர் வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு திருகோணமலையில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் குறிப்பிட்ட தினங்களில் நடத்த முடியாமல் ஒத்திவைக்கப்பட்ட தமிழ்த் தினப் போட்டி நிகழ்ச்சிகளே இவ்வாறு நடத்தப்படுகின்றது.

திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள இப் போட்டிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலிருந்தும், வடக்கு மாகாணத்தில் உள்ள 12 வலயங்களிலிருந்தும் மாணவர்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்கள்.

இறுதி நாள் நிகழ்வின்போது கிழக்கு மாகாண ஆளுநரும் வடமாகாணபதில் ஆளுநருமான றியல் அட்மிரல் மொகான் ஜயவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ச-5)

20 சதவீதமான பாடசாலை ஆசிரியர்கள் தினமும் கடமைக்குச் செல்வதில்லை

கல்வி அமைச்சின் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் 20 சதவீதமானோர் தினசரி பாடசாலைகளுக்குச் செல்லாது விடுமுறை பெற்று வருவதாகக் கல்வி அமைச்சு நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு ஆசிரியர்கள் விடுமுறை பெறுவதன் காரணமாகப் பாடசாலைக் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பாடசாலை நேரத்தில் விடுமுறை பெற்றுக் கொண்டு தனியார் வகுப்புக்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இருப்பதும் இவ்வாறான நிலை நகர்ப்புறங்களில் அதிகமாகக் காணப்படுவதும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்கான பல்வேறு ஊக்குவிப்புச் சலுகைகளைக் கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ள போதிலும் ஆசிரியர்கள் விடுமுறை பெறுவதைத் தவிர்த்து மாணவர்களுக்குக் கற்பித்தல் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டாமல் இருப்பது கவலை தரும் விடயமாகும் என இந்நிலை குறித்து கல்வி அமைச்சு குறிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

ஏனைய அரச துறைகளைவிட ஆசிரியர்களுக்கே அதிகமான விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. அதிகமான விடுமுறைகளைப் பெற்று வெளிநடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர் குறித்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில்லை எனவும் இக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

ஈழத் தமிழ் அகதிகளுக்கு விசேட அடையாள அட்டை

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் 12வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 31 ஆம் திகதிக்குள் அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டு விடுமென்றும் இதற்கான பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இனப்பிரச்சினை காரணமாக அகதிகளாகச் சென்ற இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் பல்வேறு அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியிலுள்ள கொட்டப்பட்டு முகாமில் 491 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 734 பேர் வசித்து வருகின்றனர்.

இதேவேளை இலங்கையில் நிலவும் பதற்ற நிலை காரணமாக தற்போது அகதிகள் மறுவாழ்வு முகாம்களிலும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தமிழக அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

வசதி குறைந்த 28 மாணவர்களுக்கு சைவ சமய விவகாரக் குழு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினால் கல்வியில் ஆர்வம் கொண்ட வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்விசார் நிதியுதவியாக தலா ஆயிரம் ரூபா வீதம் 28 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக குழுவின் செயலாளர் இ.இரத்தின சிங்கம் தெரிவித்தார்.

இக் கல்விசார் நிதியுதவியினைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களின் விபரம் வருமாறு,

டயானி ஜெகநாதன், செல்வரத்தினம் பிரசாந், ஆனந்தராஜா பிரியங்கன், இராசதுரை சுகன்ஜா, பத்மநாதன் பிரதீபன், ஞானப்பிரகாசம் சஞ்சிகா , புஷ்பராஜா நிரோஷன், ஜெகமோகன் தனுஸ்யன், விஜயரட்ணம் சிந்துஜன், மோகன் துவாரகன், திருநாவுக்கரசு மயூரிக்கா, திருச்செல்வம் கீர்த்தனா, சிவசங்கர் துவாரகன், ஜெயராமன் சிறிக்குமரன், பசுபதி தர்ஷிகா, சுவேந்திரன் அர்ச்சுனன், கிறிஸ்ணானந்தன் திலானி,

சிறிதாஸ் கஸ்தூரி, தர்மலிங்கம் சுதர்ஷன், சிவபாலன் சிந்துஜன், தேவராஜா துஷ்யந்தன், துரைராஜசிங்கம் ஷதுஷனா, ஜெயா நிலானி, பரமசோதி நிர்மலா, பாலேந்திரன் சுஜிதா, பாலேந்திரன் சிந்துஜா, பா. சுகிர்தன், பா. கஜானன். (ச-3)

விற்பனைக்கு

பூச்சி நீக்கிய 45 நாள் நிரம்பிய சுத்த இன பொம்மேரியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் மற்றும் ஆங்கிலத் தட்டச்சு இயந்திரம், மிருதங்கம், ஸ்ராண்ட் பான் (Fan), மலோடிக்கா என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:- A.G.செல்வம், 107 டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (811)

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

2007 ஆம் ஆண்டு இளம் சைவப் புலவர்,சைவப் புலவர் தேர்வுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகளை நடாத்துவதற்கு தேவையான நூல்களை வழங்குதல் சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத் தேர்வுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு மு.திருஞானசம்பந்த பிள்ளை கேட்டுக் கொண்டுள்ளார். (ச-3)

சிறுமியைக் காப்பாற்றிய இராணுவச் சிப்பாய்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனோகராச் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தின்போது சிக்கித் தவித்த சிறுமியை அப் பகுதியில் கடமையிலிருந்த இராணுவச் சிப்பாய்கள் காப்பாற்றியுள்ளதாக இராணுவத் தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கும் அவர்கள் உதவி புரிந்ததாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (எ)

நன்கொடை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு,மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2006 ஆம் ஆண்டுக்கான நன்கொடை வழங்கப்படவுள்ளதாக செயலாளர் சி.தெ.குலநாயகம் அறிவித்துள்ளார்.

அப் பிரதேசத்திற்குட்பட்ட சனசமூக நிலையங்களை எதிர்வரும் 16 ஆம் திகதி பிரதேசசபை தலைமையகத்தில் நன்கொடையைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

தனி மனிதருக்கு ஒரு நியாயம் என்ற பிரிவு இருக்கும் வரையில் காட்டில் வாழும் விலங்கின் நிலையிலிருந்து இன்னும் மனிதன் முன்னேறவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

–பெர்னார்ட்ஷா

வலம்புரி

கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்து பெரும் யுத்தத்திற்கான அழைப்பு

விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்காவின் உதவி தேவைப்படுவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இலங்கையின் அனைத்து கடல் மற்றும் விமானத் தளங்களையும் அமெரிக்கப் படைகள் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் உடன்படிக்கை இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டதையடுத்துப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேற்போந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் தெற்காசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி ராஜாங்க செயலாளர் ஷ்ரீபன் மான், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளக் ஆகியோரை சந்தித்த கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்துவதற்கு அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் ஓயும் வரை அரசியல் தீர்வொன்றைக் காண்பது சாத்தியமில்லை என்றும் அச் சந்திப்பில் கோத்தபாய ராஜபக்ஷ கூறத்தவறவில்லை.

இராணுவத் தீர்வுக்கு சமாந்தரமாக அரசியல் தீர்வு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஏற்க மறுக்கும் கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தை ஒடுக்குவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனக் கூறி அதற்கு அமெரிக்காவின் உதவியையும் கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை யுத்த சூழ்நிலை அற்ற நிலையில் முன்வைப்பதாகவிருந்தால் அதனை பண்டா -செல்வா ஒப்பந்தத்தின் போது செய்திருக்க வேண்டும்.

ஆனால் அதனைச் செய்வதற்கு அன்றைய அரசியல்வாதிகள் முன்வரவில்லை. இப்போது நிலைமை மாறிவிட்டது. இலங்கையின் அரசியல் எல்லைகள் அரச கட்டுப்பாடு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு என்றவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

எனவே விடுதலைப்புலிகளின் துப்பாக்கிகள் ஓயும் வரை இனப்பிரச்சினைக்கானதீர்வுத் திட்டம் சாத்தியப்படாது என கோத்தபாய ராஜபக்ஷ கூறுவது நாட்டில் மிகப் பெரியதொரு யுத்தத்தை வரவேற்பதாகவே அமையும்.

விடுதலைப்புலிகளின் ஆயுதப் பலத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டாமென அமெரிக்கா இலங்கைக்கு ஆலோசனை கூறியிருந்ததும், விடுதலைப்புலிகளின் பலத்தைக் குறைப்பதற்கு அமெரிக்கா உதவ வேண்டும் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுவதும் 'நான் இப்படிக் கூறுவேன், நீ அப்படிக் கேள்' என்பது போல் இருக்கின்றது.

அதாவது இலங்கையின் அனைத்துக் கடல் மற்றும் விமானத் தளங்களை அமெரிக்கப் படைகள் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் புலிகளின் படைப் பலம் பற்றி அமெரிக்காவும் அதனை அடக்க உதவுமாறு இலங்கையும் கேட்டுக் கொள்வது உள் நோக்கம்உடையது என்ற முடிபுக்கு நாம் வருவதில் தவறில்லை.

எதுவாயினும் விடுதலைப்புலிகளை அடக்குவது, அதன் பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது என்ற கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்து யுத்த நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யும் நோக்குடையதையும், மிகப் பெரும் யுத்தமொன்றை நடத்த தயாராவதையும் இலக்காகக் கொண்டது என்ற முடிபுக்கு நாம் வரலாம்.

கடத்தல் குறித்து உடன் அறிவிக்குமாறு தமிழ்க் கூட்டமைப்பு வேண்டுகோள்

யாழ்.குடாநாட்டில் கடத்தல் சம்பவங்கள் நடைபெறும் போது உடனடியாக அறிவித்தால் கடத்தலை முறியடிப்பதற்கு அல்லது கடத்தல்காரர்களையும் கடத்தப்படுபவர்களையும் கண்டு பிடிப்பதற்கு எம்மாலான ஆக்கபூர்வமான முயற்சிகளைச் செய்ய முடியுமென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

021 228 5949 என்ற தொலைபேசி இலக்கத்துடனும் 0112 778496 என்ற பக்ஸ் இலக்கத்துடனும் அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை காணாமல் போனோர், படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான முறைப்பாடுகளைச் செய்வோர் விபரங்களைப் பூர்த்தி செய்து தபால் மூலமாகவோ,பக்ஸ் மூலமாகவோ தாமதமின்றி அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவரின் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய இனம், பால், சம்பவ திகதி, சம்பவ இடம், சம்பவத்தின் விபரம், சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் பற்றிய விபரம், முறைப்பாட்டாளரின் பெயர், முகவரி, தொலைபேசி,தொலைநகல் இலக்கங்கள், ஈ மெயில் முகவரி ஆகிய விபரங்களை பூர்த்தி செய்து சம்பவம் தொடர்பாக சிறிலங்கா காவல்துறையிலும் மனித உரிமை ஆணைக்குழு, கிராம சேவையாளரிடம் மேற் கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் ஆவணங்களின் பிரதிகள் இணைத்து செ.கஜேந்திரன் பாராளுமன்ற உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகம், பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி அல்லது S.Kajendren M.P., No.B 16,M.P's Housing Complex, Madiwela, Sri Jayawerdanapura என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தரவுகளைக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையில் முறையிடவுள்ளதாகவும் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ஞ)

புலிகளுடனான ஒப்பந்தம் குறித்து உடனடியாக விசாரிக்க வேண்டும்

ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த அனைத்துக் கட்சிகளும் அடங்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து நாட்டு மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுமிடத்து நாங்கள் அதற்கு முழுமையான ஆதரவினை வழங்குவோம் என்று ஜே.வி.பியின் கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி. அசாங்கத்திடமும் உள்ளூர் தொண்டர் அமைப்புக்களிடமும் கோரிக்கை விடுகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில், ஜே.வி.பிக்குத் தெரிந்த வகையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தரப்பினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எந்த விதமான உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவில்லை.

ஆனால் எங்களுக்குத் தெரியாத வகையில் மகிந்த ராஜபக்ஷவின் தரப்பினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதா? என்று எமக்குத் தெரியவில்லை.

எப்படியிருப்பினும் அவ்வாறு எங்களுக்குத் தெரியாத வகையில் விடுதலைப்புலிகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தால் அது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகும். அது எம்மையும் ஏமாற்றும் செயலாகும்.

எனவே இவ்விடயம் குறித்து ஆராய உடனடியாகப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அமைத்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். மக்களுக்கு உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். இவ்விடயம் தொடர்பாக உண்மையை அறிய மக்களுக்கு உரிமையுண்டு. அரசாங்கத்தின் பிரபல எம்.பிக்களான சீறிபதி சூரியாராட்சியும் மங்கள சமரவீரவும் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

எனவே இவ்விடயத்தை வெறுமனே விட்டு விட முடியாது. இந்த விடயம் குறித்து ஆராய பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்படுமிடத்து எமது கட்சி அதன் செயற்பாடுகளுக்கு முழுமையான ஆதரவினை வழங்கும் என்றார். (ச–5)

மகிந்த சிந்தனையிலிருந்து வெளியேறினால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோம்

அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜாதிக ஹெலஉறுமயக் கட்சி தேரர்களின் ஆணையை நிறைவேற்றவே அமைச்சுப் பதவியைப் பொறுப்பெடுத்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி மகிந்த சிந்தனைக்கு எதிராகச் செயற்பாட்டால் அமைச்சுப் பதவியைக் கையளித்து விட்டு 24 மணிநேரத்திற்குள் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம் என ஜாதிக ஹெலஉறுமயக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதேஅவர் இதனைத் தெரிவித்தார். மகிந்த ராஜபக்ஷ என்ற தலைவர் சுதந்திரக் கட்சியின் உருவாக்கமல்ல. ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா,ரணிலுக்கே வாக்களித்திருந்தார் என்றே நான் கருதுகின்றேன்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் மகிந்தவை நாட்டில் தலைவராக்கியது நாமே. அதில் பின்னர் சில பங்குதாரர்கள் ஆனார்கள். இன்று பல குறை நிறைகள் இருந்தாலும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண அரசாங்கம் முயன்று வரவேற்கத்தக்கது.

நாம் அரசாங்கத்திடம் இணைந்து கொண்டாலும் அதற்காகவே. கடந்த ஆறு மாதங்களில் எமது முகாம்களில் ஒற்றைக் கூட கைப்பற்ற புலிகளால் இயலவில்லை. ஆனால் எமது படையினர் புலிகளின் 35ற்கும் மேற்பட்ட முகாம்களைக் கைப்பற்றினர். இதுவே ஹெல உறுமய பெற்ற வெற்றியாகும்.

எமது சில இளம் பிக்குகள் ஜே.வி.பியினருடன் இணைந்து செயற்படுகின்றார்கள். ஆனால் அக்கட்சியில் பிக்குகளுக்கு அதிகாரம் உண்டா? சொதியில் போடப்படும் கருவேப்பிலையைப் போன்றே ஜே.வி.பி. பிக்குகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் மாக்சியத்தைப் பேசி மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். பிக்குகளுக்கு அதிகாரப் பலம் இருக்கும் ஒரே கட்சி ஹெலஉறுமயக் கட்சியாகும். ஜே.வி.பியின் மத்தியில் ஓரளவுக்கு மாற்றம் ஏற்படக் காரணம் எமது கட்சியாகும்.

நாட்டிற்கு ஏற்புடைய சட்டங்களை நாம் சமர்ப்பித்து அமுல்படுத்தக் காரணமாக இருந்திருக்கிறோம்.அதுபோல் எதிர்வரும் மே மாதம் மத மாற்றத் தடைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அமுல்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார் அவர். (ச–5)

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பதினைந்து லட்சமாக அதிகரிக்கத் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் மூன்றாண்டுகளுக்குள் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 15 லட்சமாக அதிகரிப்பதனை இலக்காகக் கொண்டு சுற்றுலாத்துறையில் பாரிய திட்டங்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத்துறை முன்னேற்றத் திட்டத்திற்கென சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதற்கும் அதற்குத் தேவையான வழிகாட்டுதல்களுக்கென 15 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இக்குழு சுற்றுலா சபையினதும் அமைச்சினதும் அதிகாரிகளைக் கொண்டதாக அமையும். சுற்றுலாத்துறையினைமுன்னேற்ற அனைத்துத் தரப்பினரதும் யோசனைகளை இந்தக் குழுவுக்கு வழங்க முடியும்.

இந்த யோசனைகளில் மிகச் சிறப்பான யோசனைகளை தெரிவு செய்து அதனை அமுல்படுத்த நடவடிக்கை மேற் கொள்ளப்படும். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் லட்சக்கணக்கில் வேலை வாய்ப்புக்களை இளைஞர், யுவதிகளுக்குப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் இத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் 3 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா வருமானத்தை பெற எதிர்பார்ப்பதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். (ச–5)

பொருட்களை சீராக மக்களுக்கு வழங்க கூட்டுறவுச் சங்கங்கள் ஒத்துழைப்பதில்லை

அரச அதிபர் மீண்டும் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடநாநாட்டிற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்படும் அத்தியாவசியப் பொருட்களை உரியமுறையில் மக்களுக்கு விநியோகிப்பதில் கூட்டுறவு அமைப்புக்கள் ஒத்துழைப்புக்களை வழங்குவதில்லை என்று யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு அமைப்புகளுடனான சந்திப்பின் போது அவர் இக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ள பொருட்கள் விநியோகிக்கப்படாத நிலையில் கூட்டுறவு அமைப்புக்களின் களஞ்சியங்களில் தேங்கியுள்ளமை ஆய்வுகளில் தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் அவற்றினை விநியோகிக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென்று அவர் கூட்டுறவுச் சங்கங்களை பணித்துள்ளார். (ச-3)

அமெரிக்காவுடனான ஒப்பந்தம்...

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்த-புலி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக்குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவும் பதிலளிக்கவேண்டும்.

புலிகள் கிழக்கில் பின்வாங்கிச் செல்ல வேண்டும். அதற்கு அரசாங்கம் புலிகளுக்கு பணம் வழங்கவேண்டும். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் தாக்குதல் நடத்துவதில்லை. மற்றும் கருணா குழுவின் ஆயுதங்களைக்களைதல் போன்ற நிபந்தனைகளே மகிந்த-புலி உடன்படிக்கையில் இடம் பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் அண்மையில் செய்து கொண்ட பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தமானது பாரியளவில் எமது நாட்டுக்கு பாதகமாக அமையக்கூடியதாகும். இந்த உடன்படிக்கையின் விதிகளே கேள்விப்பட்டால் மக்கள் ஆச்சரியமடைவர்.

இந்த உடன்படிக்கை தொடர்பாக நாட்டு மக்களுக்கு எந்தவிதமான தெளிவுபடுத்தலையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. இந்நிலையில் இந்த பயங்கரமான உடன்படிக்கை குறித்த ஆச்சரியமூட்டக்கூடிய தகவல்களை எதிர்வரும் பாராளுமன்றக் கூட்டத் தொடரின்போது நான் வெளிப்படுத்துவேன்.

எமது ஆட்சிக்காலத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது அதனை வெளிநாட்டு ஆக்கிரமிப்பு எனக்கூறிய ஜே.வி.பியினர் இன்று இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் செய்துகொண்ட உடன்படிக்கை குறித்து ஏன் மௌனம் சாதிக்கிறது எனக்கேள்வி எழுப்பினார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நம்பிக்கையை இழந்து விட்டது. அரசாங்கம் சர்வதேசத்தின்முன் குற்றவாளிக்கூட்டிலேயே நிற்கிறது. சர்வதேச உதவிகள் என்று எம்மால் எதனையும் செய்யமுடியாது. சர்வதேச உதவி தேவையில்லை என்றால் எவ்வாறும் நடந்து கொள்ளலாம். ஆனால், இலங்கை வாழ்வதற்கு தகுதியற்ற நாடு என்ற சான்றி தழையே கடந்த ஒன்றரை வருடகாலத்தில் மகிந்த சிந்தனை எமக்கு வழங்கியுள்ளது.

நாட்டில் தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டுக் கப்பம் கோரப்படுகின்றனர். இது பிரசித்தி பெற்ற இரகசியமாகவுள்ளது. அரசாங்கம் இதற்கு பொறுப்புக்கூறவேண்டும்.காரணம் அரசாங்கத்திற்கு இந்த சம்பவங்களுடன் தொடர்பிருப்பதாகவும் சந்தேகம் நிலவுகின்றது என்றார்.(ச-5)

கிளைமோர் தாக்குதலில் இருவர் உயிரிழப்பு

மன்னார் மாவட்டத்திலுள்ள விடுதலைப் புலிகளின் பிரதேசமான மடுப்பிரதேசத்தில் தருப்புக்கடந்தான் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை கிளைமோர்த் தாக்குதல் ஒன்று இடம் பெற்றுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத் தாக்குதலின்போது அஞ்சல் அலுவலக ஊழியர் ஒருவரும் மற்றுமொருவரும் உயிரிழந்ததாகவும் இத் தாக்குதலினை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினரே நடத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச-3)

மட்டக்களப்பில் விமானத்தாக்குதல்

மட்டக்களப்பு தொப்பிகலப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது நேற்று காலை 10.30மணியளவில் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் இலக்குகள் மீது கிபீர் மற்றும் மிக் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நிலையம் மேலும் கூறியுள்ளது. பாதுகாப்புத் தரப்பினர் மீது அண்மைக் காலமாக அப் பிரதேசத்திலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகவும் நேற்று முன்தினம் முற்பகல் இப் பிரதேசம் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

10 ஆயிரம் தபால் பொதிகள் மேக்பாலவில் ஏற்றப்பட்டது

திருகோணமலையிலிருந்து யாழ்.குடா நாட்டுக்கான 10 ஆயிரம் தபால் பொதிகள் மேக்யால என்ற கப்பலில் நேற்று ஏற்பட்ட நிலையில் அவை ஓரிரு தினங்களில் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரப்படும் என எதிர் பார்ப்பதாக யாழ்.பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஜனவரி 11 ஆம் திகதிக்கு பின்னர் எடுத்துவரப்படாத நிலையில் தேங்கிக்கிடந்த 6 ஆயிரத்து 750 தபால் பொதிகளும் கொழும்பிலிருந்து சேகரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 250 தபால் பொதிகளுமே இக் கப்பலில் எடுத்துவரப்படுகின்றது.

இதேவேளை வெளிநாடு மற்றும் வெளி மாவட்டத்திற்கான 16 தபால் பொதிகள் நேற்றுக் காலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெல்லிப்பழையில் வைத்துக் கையளிக்கப் பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-3)

ஐ.நா.சபை அதிகாரிகளுக்கு...

ஜெனீவாவில் உள்ள பலைஸ் டெஸ் நேசனில் ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் நான்காவது கூட்டத்தொடரில்கலந்துகொண்டு மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைப் பிரதிநிதியின் வருகையினால் ஒரு காத்திரமான பரிந்துரை கிடைக்குமென அரசாங்கம் நம்புகிறது. செயற்திறன் மிக்க ஓர் உறுப்பினர் என்ற முறையில் இலங்கை தனது வெளிப்படையான வலுவான தொடர்பாடல்களை இந்தச் சபையுடன் கொண்டுள்ளது.

சுவிஸ்லாந்தின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் எழுப்பப்பட்டபோதே அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் இரு உறுப்பினர்களுக்கான அழைப்பை விடுத்திருந்தது.

கடந்த வாரம் மனித உரிமைகள் தொடர்பான கூட்டம் அரசாங்கத்தினால் கூட்டப்பட்டதுடன் எல்லாப் பகுதி பொலிஸ் நிலையங்களின் அதிகாரிகளுக்கும் பொலிஸ்மா அதிபரினால் மக்களின் அடிப்படை உரிமைகளை மதிக்கும்படியும் கூறப்பட்டது.

அரசாங்கம் தொடர்ச்சியாக எடுத்துவரும் நடவடிக்கைகளில் இது ஒரு பகுதியாகும். எனது தலைமையில் உள்ளக அமைச்சரவை குழு ஒவ்வொரு மாதமும் கூடி மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய நடவடிக்கை கள் தொடர்பாகவும் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதுண்டு என்றார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் லூய்ஸ் ஆபர் தனது ஆரம்ப உரையில் மனித உரிமைகள் சபை ஒவ்வொரு நாடுகளினதும் மனித உரிமைகளின் மேம்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களில் இருந்து அந்த நாடுகளை விடுவிப்பதற்கு ஒரு திட்டத்தை உருவாக்க உள்ளதாகவும் ஒவ்வொரு நாடுகளு டனும் மனித உரிமை கள்சபை இது தொடர் பாக நியாயபூர் வமாக வும் பக்கசார்பு அற் றும் பேசவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

இலங்கை உட்பட பல நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதன் மீதான நடவடிக்கைகள் தொடர்பாக லூய்ஸ் ஆபரால் இன்று ஒரு அறிக்கை வெளியிடப்படவுள்ளது. (ச-5)

மக்கள்...

ஜயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கொழும்பிலும் வடக்கு கிழக்கிலும் இடம் பெறும் ஆட்கடத்தல்கள்,படுகொலைகள்,கப்பம் பெறுதல் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து ஜேர்மனியத் தூதுவருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டதாக மேலக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

மனித உரிமை...

வட்டாரங்களினால் இரகசியமாகவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு அமெரிக்காவினால் அ... வெளிவிவகார அமைச்சின் ஆசிய பிராந்திய பிரதிநிதியான ஷ்வென்மான் அனுப்பப்பட்ட பின்னர் யப்பானியப் பிரதிநிதி வருகை தந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பெருமளவான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா கடந்த வார முற்பகுதியில் கடுமையாகச் சாடியிருந்தது தெரிந்ததே. (ச-5)

கைதிகளின்...

விரதத்தில் ஈடுபட்டிருந்த 42 கைதிகளுள் 12 பேரின் உடல் நிலை மோசமானதையடுத்து அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களுள் 11 பேர் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளதாகவும் ஒருவர் சிகிச்சை பெற்று வருவதாக தமிழரசுக் கட்சிப் பாரா ளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (ச-5)

இணைவு...

கேள்விக்குறியாகியுள்ளது என்றும் ஐ.நா. கூறியுள்ளது.

இலங்கையில் இனப்போர் தொடங்கி 20 ஆண்டுகளில் 70 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். 4 இலட்சத்து 65 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர் என ஐ.நா.புள்ளிவிபரம் வெளியிட்டுள்ளது. (ச-5)

Médecins Sans Frontiéres (MSF)-France

MSF is an International independent humanitarian medical aid agency committed two objectives: providing medical aid wherever needed, regardless of race, religion, politics or sex and raising awareness of the plight of the people we help.

VACANCY

Position:Nurse

We are looking a skilled,energetic and dynamic person to suit the above position to our office in Point Pedro.The Nurse will work with the medical team in the project of hospitals,as well as medical translator.

Skills required:

- Excellent communication skill in English.
- Good interpersonal skill.
- Diploma/Certificate in Nursing.
- Previous working experience in Operation Theatre would be an advantageous.

Please forward your **CV** along with contact phone numbers and two non-related referees to the following address before **23rd March 2007.**

Field Coordinator
Médecins Sans Frontiéres (MSF)-France
Manthikai
Point Pedro.

(810)

வடக்கு-கிழக்கில் வன்முறை...

படுகின்றன. இது மிக அபாயமான நிலையாகும். இந் நிலை மேலும் தொடர்ந் தால் மிகப் பாரதூரமான விளைவுகள் ஏற் படும்.

பொதுமக்கள் இன்னும் அதிகமாக பாதிப் புக்குள்ளாவார் கள், வடக்கு கிழக்கின் சகல முன்னரங்க நிலைகளிலும் இராணு வம் மற்றும் விடுதலைப்புலிகளால் பரஸ்பரம் எறிகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் அப் பகுதிகளில் வாழும் மக்கள் இடம் பெயர வேண்டிய துர்ப்பாக்கியமான நிலை ஏற்பட்டுள்ளது.

மோசமான அளவில் மேற்கொள்ளப்படும் எறிகணை வீச்சுக்களால் மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து வருகின் றனர்.

கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் இவ் எறிகணை வீச்சுக்களால் இடம்பெயரும் மக்களும் பாதிப்படைகின்றமை கவலையளிக் கின்றது.

இது ஒரு புறமிருக்க, மட்டக்களப்பின் தொப்பிகல பகுதியிலும் வன்னியின் மல்லாவிப் பகுதியிலும் வான் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வன்னியில் செயற்படும் அனைத்து சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் மல்லாவியை தளமாகக் கொண்டே செயற்பட்டு வருகின்ற மை குறிப்பிடத்தக்கது.அத்தோடு வன்னி யில் கடந்த சில வாரங்களில் நான்கு கிளை மோர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. இதில் இரண்டு பொதுமக்கள் கொல் லப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மேலும் படுகொலைகள் மற்றும் ஆட்கடத் தல்கள் நாட்டில் பரவலாக இடம்பெற்று வருகின்றன.தற்போது தோன்றியுள்ள பாதுகாப் பற்ற மோசமான சூழ்நிலையை உணர்ந்து மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பு நிலைமைகள் மேலும் மோசமடைவதை தடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு நிலைமைகள் சுமுகமடையும் என்ற நம்பிக்கையிலேயே தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது. மோதல்களை நிறுத்தி மீண்டும் அமை தியை ஏற்படுத்துவதில் இரு தரப்புக்கு உதவ வும் ஒத்துழைப்பு வழங்கவும் கண்கா ணிப் புக் குழு தயாராக உள்ளது என்றார். (ச-5)

இலங்கை அரச அங்கீகாரம் பெற்ற கணனி சான்றிதழ் பெறுவதற்கு...

இலங்கை தேசிய பயிலுனர் கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) நிறுவன மூலம் நடாத்தப்படும் இலங்கை கணனி இயக்குனர் அனுமதிப் பத்திர Sri Lanka Computer Driving License (SLCDL) பரீட்சைக்கான விரிவுரைகள் 17.03.2007 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

மேற்படி பயிற்சி நெறிக்கு பதிவு செய்த மாணவர்களும்,புதிதாக பதிவு மேற்கொள்ள இருக்கும் மாணவர்களும் 14.03.2007 புதன் மாலை 4.00 மணிக்கு பயிற்சியகத்திற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சென்.அன்ரனிஸ் கணனி அறிவுசார் கல்வியகம்,
4-ம் குறுக்குத் தெரு,பருத்தித்துறை.

(812)

தொலைவலையில்...

யில் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தமது அடையாளங்களை உரிய முறையில் உறுதிப்படுத்த தவறியமையால் இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்டதாக கல்கிசைப் பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.